ஏற்கனவே அறிவிக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்ட

# தி.மு.க. தலைமைச் செயற்குழுக் கூட்டம் 22.12.2024 ஞாயிறு அன்று நடைபெறும்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



ஏற்கனவே அறிவிக்கப்பட்டு, ஒத்திவைக்கப்பட்ட தி.மு.க. தலைமைச் செயற்குழுக் கூட்டம் கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 22-12-2024 **ஞாயிறு அன்று காலை** 10.00 **மணி அளவில்** சென்னை, கலைஞர் அரங்கில் நடைபெறும்.

அதுபோது தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் : கழக ஆக்கப் பணிகள்**

குறிப்பு : ஏற்கனவே அனுப்பப்பட்ட அழைப்பு கடிதத்தினை தவறாது கொண்டு வர வேண்டும்.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 600 018
நாள்- 17.12.2024

---

கன மழையால் பாதிக்கப்பட்ட

## செம்பனார் கோயில் ஒன்றியத்தில் நிவாரண உதவிகள் வழங்கல்!

மயிலாடுதுறை, டிச. 19 -

தென்கிழக்கு வங்கக் கடல் பகுதியில் நிலவி வந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்றதன் காரணமாக காவிரி டெல்டா மாவட்டங்களில் தொடர்ந்து மூன்று நாட்களாக கன மழை பெய்தது. இதனால் மயிலாடுதுறை மாவட்டத்தில் பெரும் பாதிப்பு ஏ ற் பட்டுள்ளது. இதையடுத்து மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன் தரங்கம்பாடி பேரூராட்சி பகுதி, செம்பனார்கோயில் ஒன்றியப் பகுதியில் வெள்ள நீர் சூழ்ந்துள்ள பகுதிகளை பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார். தரங்கம்பாடி பேரூராட்சிக்குட்பட்ட அய்யனார்கோயில் தோப்பு பகுதி, ராஜாம்பால் புதுத்தெரு, சோனவான் தோட்டம் பகுதியை பார்வையிட்டு வெள்ள நீர் வடிய உரிய ஏற்பாடு செய்ய அதிகாரிகள கேட்டுக் கொண்டார். தரங்கம்பாடி புதுத் தெரு வில் குரு நாதன் காத்தாயி என்பவர்களின் வீட்டின் சுவர் இடிந்து விழுந்து வீடு பாதிக்கப்பட்ட இடத்தை பார்வையிட்டு குடும்பத்திற்கு நிதி உதவி வழங்கினார்.

---

# வாழ்வார் என்றும் பேராசிரியர்!



எவரும் நமக்குத் தாழ்ந்தவர் இல்லை!
எவர்க்கும் நாமும் தாழ்ந்தவர் இல்லை!
சுவரில் எழுதிய சித்திரம் போலே
சொன்னவர் இப்படிப் பேரா சிரியர்!

பெரியார், அண்ணா இன்றைக் கில்லை!
பெரிய வெற்றிடம் நமக்கின் றில்லை!
இருவரின் வடிவாய் கலைஞர் இருக்கிறார்!
என்று மொழிந்தவர் பேரா சிரியர்!

சூடும் சொரணையும் சொற்களில் தந்தவர்!
சுயமரி யாதை உடுத்தி நடந்தவர்!
ஏடும் நாடும் போற்ற வாழ்ந்தவர்!
இனமானக் காவலர் பேரா சிரியர்!

வலைப்ப டாதவர் வஞ்சகம் சூழ்ச்சியில்!
மயங்கி விடாதவர் வெற்றுப் புகழ்ச்சியில்!
குலப் பகைவரும் குறைசொல்ல முடியாக்
கொள்கைச் சூரியன் பேரா சிரியர்!

வான்மழை போலே கருணை பொழிந்தவர்!
வார்த்தையும் வாழ்க்கையும் ஒன்றென நின்றவர்!
தேன்மக ரந்தப் பூந்தமிழ்! எங்கள்
திராவிடத் தென்றல் பேரா சிரியர்!

ஏற்ற பொறுப்புக்குப் பெருமை சேர்த்தவர்!
எளிய தொண்டரை அரவ ணைத்தவர்!
சீற்றப் புயலாய் இனப்பகை முன்னே
சினந்து கனன்றவர் பேரா சிரியர்!

வண்கடல் அலையாய் ஆர்ப்ப ரித்தவர்!
வடக்கின் இடக்கை நேர்ள திர்த்தவர்!
கிண்கி ணீர்எனும் வெண்கலக் குரலால்
கீர்த்தி படைத்தவர் பேரா சிரியர்!

எங்கும் தமிழே! எதிலும் தமிழே!
இன்னுயிர் ஆகும் அன்னை நிலமே!
சிங்க மறவனே! சிலிர்த்தெழு வாய்!எனத்
தீக்கனல் பெய்தவர் பேரா சிரியர்!

எதுநம் பண்டைய தமிழ்மர பென்றும்
எதுநம் தொல்புகழ் வரலா றென்றும்
"புதுவாழ்வு" என்னும் இதழை நடத்திப்
பொன்னொளி தந்தவர் பேரா சிரியர்!

எத்தனைச் சோதனை இடர்தொடர் கணையாய்!
இடம்பிற ழாமல் தடம்புர ளாமல்
அத்தனைக் களத்திலும் தலைமைக்குத் துணையாய்
அருகில் இருந்தவர் பேரா சிரியர்!

ஆட்சியில் கழகம் வாகை சூடவும்
ஆதிக்க இந்தி அஞ்சி ஓடவும்
மூச்சும் பேச்சும் நிற்கும் வரைக்கும்
முழக்கம் செய்தவர் பேரா சிரியர்!

கலைஞரை என்னைப் பிரிக்க நினைப்பவன்
கலப்படம் இல்லாத முட்டாள்! என்றே
தலைமைச் செயற்குழு மண்டபம் அதிரச்
சாற்றிய கோமான் பேரா சிரியர்!

நதியென இயங்கும் நல்ல இளைஞன்!
நாட்டுக்கும் மொழிக்கும் கழகத் திற்கும்
"புதிய விடியல் ஸ்டாலின்" என்றே
புகழ்ந்து மகிழ்ந்தவர் பேரா சிரியர்!

வீட்டுச் சாவியைப் பிள்ளைக்கு வழங்கிட
வேறெவன் அனுமதி வேண்டும்? "ஸ்டாலின்"
ஆற்றல் தகுதியைக் கலைஞரும் நானும்
அறிவோம் என்றவர் பேரா சிரியர்!

உளமார் பொதுக்குழு ஒருமன தாக
ஒப்புதல் தந்தது! உமக்கு மட்டுமா?
" தளபதி ஸ்டாலின்" இனிமேல், எனக்கும்
தலைவர் என்றவர் பேரா சிரியர்!

தொண்டறச் செம்மல்! நமக்குள் என்றும்
துலங்கும் ஒளியாய் விளங்கி மிளிர்வார்!
வண்டமிழ் முழங்கும் எண்டிசை எங்கும்
வாழ்வார் ஐயா பேராசிரியர்!



**– கவிச்சுடர் கவிதைப்பித்தன்**

---

"ஒரே நாடு, ஒரே தேர்தல்" சட்ட மசோதா

# அரசியல் அமைப்பு சாசனத்திற்கும் கூட்டாட்சிக்கும் எதிரானது!

## நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கருத்து!



**புதுடெல்லி, டிச. 19 -**

**ஒரே நாடு ஒரே தேர்தல் சட்ட மசோதா அரசியலமைப்பு சாசனத்திற்கும் மக்களுக்கும் கூட்டாட்சிக்கும் எதிரானது என நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி தெரிவித்துள்ளார்.**

ஒரே நாடு ஒரே தேர்தல் சட்ட மசோதா டிசம்பர் 17ஆம் தேதி மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், திமுக உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகள் இதை கடுமையாக எதிர்த்தன.

இந்த சட்ட மசோதா நாடாளுமன்ற கூட்டுக் குழுவுக்கு அனுப்பப்பட்டிருக்கிற நிலையில், திமுகவின் நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி இந்த விவகாரம் குறித்து நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசினார்.

அப்போது அவர், "ஒரே நாடு ஒரே தேர்தல்" சட்ட மசோதாவை திமுக தொடர்ந்து உறுதியாக முழுமையாக எதிர்த்து வருகிறது.

இந்த சட்ட மசோதா அரசியலமைப்பு சாசனத்திற்கும் கூட்டா ட்சிக்கும் எதிரானது.

அது மட்டுமல்ல பல்வேறு தேர்தல்களில் மக்கள் தங்கள் விருப்பப்படி அளித்த வாக்குரிமைக்கும் எதிரானதாக இருக்கிறது. மக்கள் பல்வேறு மாநிலங்களில் ஐந்து ஆண்டுகள் ஆட்சி செய்வதற்கு மாநில அரசுகளை தேர்ந்தெடுத்துள்ளனர்.

மக்களிடம் இருக்கும் இந்த உரிமையை பறித்து தேர்தல் ஆணையத்திடம் அளித்து, அந்த அரசுகள் எவ்வளவு வருடம் நீடிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையமே முடிவு செய்வது என்பது மாநில அரசுகளுக்கும் அரசியலமைப்பு சட்டத்துக்கும் எதிரானது. இந்த மசோதா இந்தியாவின் கூட்டாட்சி கட்டமைப்புக்கு எதிரானதாக அமைந்துள்ளது.

இதனால் இந்த சட்ட மசோதாவை நாங்கள் ஏற்கப் போவதில்லை. முழுமையாக எதிர்க்கிறோம்"

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தெரிவித்தார்.

---

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் ஈரோடு வருகை!

# ஈரோடு தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை!



ஈரோடு, டிச. 19-

ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சு. முத்துசாமி அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்கள் ஈரோடு மாவட்டத்திற்கு கழக நிகழ்ச்சி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள இன்று (19.12.2024) மற்றும் 20.12.2024 (வியாழன், வெள்ளி) வருகை தரவுள்ளார்கள். அந்நிகழ்ச்சிகள் கீழ்க்கண்ட அட்டவணை படி நடைபெறவுள்ளது.

எனவே, இந்நிகழ்ச்சியில் ஈரோடு வடக்கு, தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளைக்கழகம் மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழகத்தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**வ.எண். நேரம் நிகழ்ச்சி இடம்**

1. 19.12.2024 மதியம் 12.00 மணி, கோவையிலிருந்து கார் மூலம் ஈரோடு காளிங்கராயன் இல்லம் வந்தடைதல், காளிங்கராயன் இல்லம், ஈரோடு,

2. 19.12.2024- மாலை 5.00 மணி, கழக நிகழ்ச்சி, தங்கம் மஹால் மேட்டுக் கடை, ஈரோடு,

3. 19.12.2024- மாலை 6.00 மணி, மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார் அவர்களின் இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சி, முத்துமஹால் பெருந்துறை ரோடு, ஈரோடு,

4. 19.12.2024 - இரவு 7.00 மணி காளிங்கராயன் இல்லம் வந்தடைதல் , காளிங்கராயன் இல்லம், ஈரோடு,

5. 20.12.2024 - காலை 10.00 மணி, அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி, சோலார், புதிய பேருந்து நிலையம்

6. 20.12.2024 - மதியம் 12.00 மணி, கார் மூலம் கோவை சென்றடைதல்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

இனமானப் பேராசிரியரின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு இன்று திருப்பூரில்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை!

## மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



திருப்பூர், டிச.19-

இனமானப் பேராசிரியரின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் ரயில் நிலையம் முன்பு அமைந்துள்ள தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு முன்பு வைக்கப்பட்டுள்ள இனமானப் பேராசிரியர் திருவுருவப் படத்திற்கு கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார் என்று மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர்களது அறிக்கை வருமாறு:-

கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இன்று 19.12..2024 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் திருப்பூர் இனமான பேராசிரியரின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு ரயில் நிலையம் முன்பு அமைந்துள்ள தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு முன்பு வைக்கப்பட்டுள்ள இனமானப் பேராசிரியர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்.

காலை 10.15 மணியளவில் திருப்பூர், கருவம்பாளையம் பகுதி, ஏ.பி.டி. சாலை, சூர்யா நகரில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு திருப்பூர் தெற்கு தொகுதி கலைஞர் நூலகத்தை திறந்து வைக்கிறார்.

காலை 10.30 மணியளவில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவல வளாகத்தில் திருப்பூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் அரசு திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்கிறார்.

மதியம் 1.00 மணியளவில் திருப்பூர் அவிநாசி சாலையில் அமைந்துள்ள பப்பீஸ் ஹோட்டலில் திருப்பூர் வடக்கு மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் சந்திக்கிறார்.

இந்நிகழ்ச்சிகளில் மாநகர கழக செயலாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்டக் கழக செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள், பி.எல்.ஏ.2 நிர்வாகிகள், உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வடக்கு மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.



நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்தநாளை முன்னிட்டு மாநகர தொழிலாளரணி மற்றும் 15 வது வட்டம் ஏற்பாட்டில் டவுண் பாறையடியில் 300 நபர்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்வு மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை தொகுதி பார்வையாளர் முத்துச்செல்வி பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அப்துல் கையூம்,நமச்சிவாயம், அன்டன் செல்லதுரை,1அஜய்,மணிகண்டன்,அந்தோணி, சேர்மதுரை, அலிஃப் மீரான், வேங்கை வெங்கடேஷ், அவதார் ஷாஜகான், கேபிள் குமரேசன், பத்மா, சௌந்தரம் முத்துராஜ், ராஜேஸ்வரி, ஆனிராக்லேண்ட், சித்ரா பௌர்ணமி உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.